# மெட்ரோ ரயில் சேவை நேரம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 21: சென்னை மெட்ரோ ரயில்கள் இயக்கம் குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

ஊரடங்கு தளர்வு காரணமாக மெட்ரோ ரயில் சேவை காலை 6.30 மணிக்கு தொடங்கி இரவு 9 மணி வரை இயக்கப்படும். பின்பு தேவையின் அடிப்படையில் நேர மாற்றம் செய்யப்படும். விமான நிலையம் மற்றும் விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையம் இடையே மற்றும் பரங்கிமலை -சென்ட்ரல் மெட்ரோ ரயில் இடையே காலை 9 மணி முதல் 11 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை 5 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும்.

மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு உள்ளேயும், பயணிக்கும் போதும் பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன், 6 அடி இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். அரசின் கொரோனா தடுப்பு வழிமுறைகளை பயணிகள் தவறாது கடைபிடித்து ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.